யங் இந்தியா.

17

ஜனவரி, 1929

O2
131ம2,N26
9.4.1
378

1222

Regd No 2169 Vol. IV—1

# ரூரல் இந்தியா

(பாரெஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை.)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடையர்ட் டிப்டி கலெக்டர்.
ஆபீஸ் : 9, ப்ராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம் IV.] ஜனவரி 1929 [நெ. 1]

## பொருளடக்கம்.


| நெ. | | பக்கம் |
|---|---|---|
| 1. | குறைவற்ற செல்வம் | 1 |
| 2. | இந்திய கிராம ஜனங்களின் ஜீவன விருத்திகள் | 3 |
| 3. | கிராம அமைப்பு | 9 |
| 4. | சுகாதார விஷயங்களைக் குறித்துச் சில வார்த்தைகள் | 12 |
| 5. | வெங்காயக்கள்ளி அடர்வதை அழிக்கச் சில யோசனைகள். | 14 |
| 6. | வர்த்தமானக் குறிப்பு | 14 |
| 7. | வெள்ளைப்பூண்டு பயிர் | 19 |
| 8. | மாடுகளின் நோய்கள் | 20 |
| 9. | கிராம கிரந்த சாலை | 21 |
| 10. | பாரஸ்டு பஞ்சாயத்தார்கள் யூனியன் லிமிடெட் | 23 |


Annual Subscription (inclusive of Postage)
Inland Rs 3 : Foreign Rs 4—8—0.
Single copy, Inland As 6 : Foreign As 8.

Rural India reaches the Villages and Towns of India
It is the best medium for advertisement.

# ஸாதன ஔஷதாலயம்.

டேக்கா : பெங்கால்

முன்பு பாகல்பூர் காலேஜில்
ரஸாயன சாஸ்த்திரத்தில் நிபுண
சாஸ்திர ஆசிரிய ராக விருந்த
ஜோகேஸ் சந்திர கோஸ், M. A. F., C. S.
அவர்களின் ஆதரவில் நடக்கிறது.

---

மிகவும் சுத்தமான ஆயுர்வேத ஔஷதங்கள் கிடைக்கும். வேண்டுவோருக்கு விலைப்பட்டி இனமாக அனுப்பப்படும். வியாதியின் விவரத்தை தெரிவித்தால் இனமாக மருந்துபட்டி அனுப்பப்படும்.

மகரத்வஜம் (சுவர்ணஸிந்தூரம்)

அசல் தங்கத்துடன் ஒருசேர் ... ரூ 4—0—0.

இது எல்லா வியாதிகளுக்கும் கைகண்டமருந்து. பித்தம், வாதம் முதலிய வியாதிகளைப்போக்குவதுடன் ரத்தசுத்திக்கும் ஏற்றது.

சரிபாடி ஸரஸா

இது மூல ரோக ஸம்பந்தமான வியாதிகளுக்கெல்லாம் ஸரியான மருந்து.

விலைஒருசேர் ரூ 3—0—0

சுக்ர ஸஞ்சீவி

இது வீர்யக்குறைவு, அபோகத்தன்மை, சுவப்பனஸிகிதம், முதலிய வியாதிகளுக்கு அமிர்தம் போன்ற மருந்து.

விலை : சேர் 1க்கு ரூ16—0—0

அபல பந்தப ஜகா.

இது ஸ்திரீகளுக்கு உண்டாகும், இடுப்புநோய் முதுகுவலி, கர்ப்பபை வியாதி அகாலமாதவிடாய் முதலிய கொடும் வியாதிகளைப் போக்கும்.

16-டோஸ் ரூ. 2. 50-டோஸ் ரூ. 5.



# ரூரல் இந்தியா.

(பாரேஸ்டு பஞ்சாயந்து பத்திரிகை.)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடைர்ட் டிப்டிகலெக்டர்.
ஆபீஸ் : 9, ப்ராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம் IV.] ஜனவரி 1929 [நெ 1


# குறைவற்ற செல்வம்

உடம்பை இயற்கை நிலையில் வளர்க்க வேண்டும், உடம்பிற்குச் சுகம் வேண்டும், திண்மை வேண்டும், ஒளி வேண்டும் அழகு வேண்டும்.

சாதனங்களால் உடம்பையும் உள்ளத்தையும் வசமாக்கி மலர்த்தி, மேலோங்கி வளர்வோன் சரீரயோகி.

உடம்பு ஆன்மாவின் ஆடை ஆதலால், உடம்பைப் போற்றி வளர்க்க வேண்டும் என்று சரீரயோக நூல் வற்புறுத்து கின்றது.

திடசரீரம் ஆன்ம பரிணாமத்திற்கு ஏற்ற கருவியாகும், அந்தரியாமியாய் எங்கும் நிறைந்து விளங்கும் இறைவன் நமது சரீரத்திலும் மறைந்து நின்று நமக்கு ஆயுளையும் ஆரோக்கியத்தையும் வீரியத்தையும் அளித்துக் காக்கிறான் என்பது யோகியரது திடநம்பிக்கை.

நமக்கு அழகிய திவ்வியமான உடம்பை ஆன்ம வளர்ச்சியின் பொருட்டுத் தனது அழகிய நல் அருளுக்குச் சான்றாக அளித்திருக்கும் மகா சக்தியே எத்தகைய பிணி கவலையாகியவற்றையும் அறவே ஒழித்து நீண்ட ஆயுளையும் நோயற்ற வாழ்க்கையையும் நமக்கு அருளி நம்மை அல்லும் பகலும் அனவரதமும் காக்க வல்லது. அண்டத்திலே பரிபூரணானந்தமாய்ப் பரந்து ஒளிரும் ஸர்வ சக்தியே, பிண்ட மாகிய உடம்பிலும் பரிபூரண சுகமாகத் தன்னை வெளியிடுகின்றது. இத்தகைய நம்பிக்கை உண்மையான ஆரோக்கியத்திற்கு 'அஸ்திவார' மாகும்.

ஊனிலும் உயிரிலும் உணவிலும் கலந்து நமக்கு இன்பத்தையும், வீரியத்தையும் ஆரோக்கியத்தையும் அருளும் சர்வசக்தி

யின் அம்சங்களாகவே, பிரகிருதி சக்தியும், பிராணசக்தியும், கருதப்படவேண்டும்.

இயற்கை நிலையில் உடம்பை ஆரோக்கியமாகவைத்திருப்பதும், சரீர இயந்திரத்தைத் திறமையாக இயக்கிப் பழுது பார்த்து பாதுகாப்பதும் காயங்களை ஆற்றி ஒடிந்த எலும்புத் துண்டுகளை ஒன்றாய் இணைப்பதும், ஸர்வாந்தரியாமியாகிய சர்வ சக்தியேயாகும்.

இயற்கை வாழ்க்கையே நோயற்ற வாழ்க்கை. செயற்கை வாழ்க்கை ஆரோக்கிய வாழ்க்கையன்று. நமது நடையுடை பாவனைகளும் வழக்க ஒழுக்கங்களும் கூடுமான வரையிலும் இயற்கையைத் தழுவியே இருக்க வேண்டும்

கவலை என்ற சுமையை இதயத்தினின்றும் தள்ளிவிடு. நம்பிக்கையாகிய உழவைச் செய்து நல் விருப்பம் என்னும் விதையை உன் மனத்தில் விதைத்தால், ஆரோக்கிய ஸ்ரீயின் நல் அருள் தானே விளையும்.

உடம்பு தக்க சாதன முயற்சிகளால் வளர்க்கப்பட வேண்டும்; நன்கு போஷிக்கப்பட வேண்டும். உடம்பைப் போஷித்து வளர்க்கும் போதே 'இது ஆன்மாவின் விருப்பத்திற்கு இணங்கித் தொழில் புரிய வேண்டிய இயந்திரம்' என்ற நல் உணர்ச்சியை உள் மனத்தில் வளர்க்க வேண்டும். இத்தகைய உபாயங்களால் யோகி திண்மை வாய்ந்த உடம்பிற்கு எஜமானனாக விளங்குகின்றான்.

இவ் வுலகில் நற்பணி செய்யும் பொருட்டு இவ் வுடம்பு நமக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. இத்தகைய லட்சியத்தோடு உடம்பைச் சாதனங்களில் பழக்க வேண்டும். தேகப் பயிற்சிக்கு உரிய சாதனங்களில் யோகி உள்ளத்தை ஒரு முனையாகச் செலுத்தி, உள்ளத்தையும் உடம்பையும் ஒருங்கே வளர்த்து இவற்றின் மீது தன்து 'ஆன்ம—சுய—ஆட்சியை' இனிது செலுத்துகின்றான்.

ஒருமையான உள்ளத்தோடும் தகுந்த தியான மந்திரத்தோடும் தேக முயற்சி செய்யும் யோகிக்குச் சரீரத்தின் ஒவ்வொரு பாகமும் ஒவ்வோர் உறுப்பும் ஒவ்வோர் அணுவும் கீழ்ப்படிந்து தொழில் செய்யும். இத்தகைய தேகப் பயிற்சியால், இச்சாநரம்புகளும் தசைகளும் மாத்திரம் அல்லது அனிச்சாநரம்புகளும் தசைகளும் கூட,

199378



யோகியின் ஆணைக்குக் கீழ்ப்படுகின்றன. இதுவே சரீர யோகியின் 'சுய ஆட்சி' யாகும்.

வல்லார் மனோ பாவத்தை வெளியிடும் குழல் போலவும், சித்திரம் போலவும், கவிபோலவும், சாதனங்களால் வளரும் சரீரமும் எஜமானனாகிய ஆன்மாவின் களங்கமற்ற உள்ள நிலையை இனிது பிரதிபலிக்கின்றது.

## இந்திய கிராம ஜனங்களின் ஜீவனவிருத்திகள்

[இது ஆசிரியர் ஜீ. எஸ். கிருஷ்ணய்யா எம். ஏ., பீ.எச்சு. டி. அவர்களால் எழுதப்பட்டது.]

நமது தேசத்தை கிராமாந்தரங்கள் மிகுதியாக விருக்கப்பட்ட தேசம் என்று கூறுகிறார்கள். அப்பெயர் எவ்வளவு வரையிலும் சரியான தென்பதை ஒருவரும் அறியவில்லை. ஸென்ஸஸின் படி இந்திய கிராம மென்பது வரி வசூலிற்காக வேண்டிய வீடுகளின் கும்பல்களையுடைத்தான ஒரு கிராமாந்தரஸ்தலம். இந்தியாவில் 685,000 கிராமங்களிருக்கின்றன. அவைகளின் மொத்த விஸ்தீர்ணம் ஏறக்குறைய 2 கோடி சதுரமைல்கள். அவைகளில் வாஸம் செய்யும் மொத்த ஜனஸங்கியை கிட்டத்தட்ட 230 கோடிகள். 3316 பட்டணங்களுமிருக்கின்றன. அவைகளில் மொத்த ஜனஸங்கியை ஏறக்குறைய 30 கோடிகள். சராசரியில் ஒரு கிராமத்தின் ஜனத்தொகை 400.

தேசத்தின் மொத்த ஜனத்தொகையில் 10 இல் ஒரு பங்குதான் பட்டணங்களில் வாஸம் செய்கிறார்களென்பதே நம்முடைய தேசத்தில் கைத்தொழில்கள் மேல் நாடுகளிற்போல் அமையவில்லையென்பதை நிரூபிக்கிறது. வியவஸாயமும் யந்திரங்களில்லாமல் வீடுகளில் அநுஷ்டிக்கப்படக்கூடிய தொழில்களுமே பெரும்பான்மையாக அநுஷ்டிக்கப்படுகின்றன. பயிர்த்தொழிலின் மூலமாகவும் ஆடு மாடுகளைக்கொண்டும் ஜீவனம்செய்யப்பட்ட பெயர்கள் ஜனத்தொகையில் முக்கால் பங்கு. அதில் $17\frac{3}{4}$ கோடி ஜனங்கள் வியவஸாயிகள், $4\frac{1}{2}$ கோடி ஜனங்கள் பயிர் ஊழியர்கள், சிலர் சாரியஸ்தர்களாகவும் எஜண்டுகளாகவுமிருக்கிறார்கள். சற்றேறக்குறைய 33 கோடி சதுரமைல்கள் நிலங்கள் பயிர் செய்வதற்கு உபயோகமானவை. ஆனால் அந்த ஸங்கியையில் 6 லக்ஷம் சதுரமைல்கள் தான் சாகுபடியிலிருக்

கின்றன. பயிர்த்தொழில்ப்பிரதேசங்களில் சராசரியில் சதுரமைல் ஒன்றுக்கு 382 பெயர்களாககிராம ஜனங்கள் வாஸம் செய்கிறார்கள். மேனாட்டு தேசங்களில் சதுரமைல் ஒன்றுக்கு சராசரியில் 250 பெயர்கள்தான் பயிர்த் தொழில் பிரதேசங்களில் வஸிக்கிறார்களாம். இந்தியாவில் ஏகர் ஒன்றிற்கு விளைவு இதலியில் ஏகர் ஒன்றுக்கு ஏற்படுகிற விளைவில்பாதி, பிராஸிலில் ஏற்படுகிற விளைவிலும் ஏறக்குறையபாதி, எகிப்தின் விளைவில் மூன்றில் ஒரு பங்கு, ஜபானின் விளைவில் கால் பங்கு. நம்முடையதேசத்தில் 5 வியவாஸாயக்குடும்பங்கள் 8, 9 குடும்பங்களின் சவரக்ஷணைக்குப் போதுமான மட்டும் தான் தான்யங்களை உற்பத்தி செய்யக்கூடும். ஐரோப்பாவிலும் அமெரிகாவிலும் 5 குடும்பங்களின் உழைப்பால் ஏற்படும் உற்பத்தி 50 குடும்பங்களை சவரக்ஷணை செய்யக்கூடுமாம். இதற்குக்காரணம் என்ன வென்றால் இந்திய வியவஸாயிகள் வெகு வெகு காலங்களாக அநுஷ்டித்து வந்திருக்கிற பயிர முறைகளையே அநுஷ்டிக்கிறார்கள். அவர்கள் நவீன வழிகளை அநுஸரிக்க இஷ்டப்படுகிறதில்லை. நல்ல விரைகளை உபயோகிக்கிறதில்லை. பயிர் நோய் விஷயங்களை அறியாமலிருக்கிறார்கள். புதிய கருவிகளையுபயோகிக்கத் துணிகிறதுமில்லை இப்பொழுது தான் இவ்விஷயங்களை சற்று கவனித்துப்பார்க்க ஆரம்பித்திருக்கிறார்கள்,

வயல்கள் துண்டு துண்டாகவிருக்கின்றன. ஒருவனுடையநில விஸ்தீரணம் அவனுடைய முயர்ச்சிகளுக்கே போதாமலிருக்கிறது. குடும்பங்களில் பாகங்கள் பிரிக்கப்படும்பொழுது நிலங்கள் துண்டுகளாகப் பாகிக்கப்படுகின்றன. இப்படி ஏற்பட்ட சிறிய துண்டுகள் வியவஸாய முயர்ச்சிகளுக்கு வேண்டிய அளவுகளில் இருக்கிறதில்லை. நிலத்தின் சொந்தக்காரன் அதன் சம்பந்தமாக அதிகச்செலவையும் செய்ய முடிகிறதில்லை. அவனுக்கு சாருபடியில் அதிக உற்சாகமும் ஏற்படுகிறதில்லை.

ஆறுகளின் அருகிலிருக்கப்பட்ட நிலங்களில் வண்டல் படிகின்றன. மற்ற நிலங்களின் சாரம் நாளடவில் குறைவு பட்டுப்போகிறது. எருமுட்டையின் நிமித்தம் சாணிகள் உபயோகிக்கப்படுகின்றன. எலும்புகளும், பாஸ் பேட்களும் இதரதேசங்களிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மழை ஒரு வருஷத்தில் போல் இன்



னொரு வருஷத்தில் பொழிகிறதில்லை. பயிர்கள் ஜலத்திற்காகத்தவித்துக்கொண்டிருக்கும் காலங்களில் அவைகளுக்கு உபயோகமாகும்படியான நீர் சௌகரியங்களின் விஷயமாய் முயர்ச்சிகள் கைக்கொள்ளப்படுகிறதில்லை. வருஷத்தில் 9மாதங்களில் உஷ்ணத்தின் பாதையினால், வியவஸாயிகள் தக்கபடி வேலை செய்யக்கூடுகிறதில்லை.

அறுவடையான பிறகு தான்யத்தைக் கொட்டிவைத்துக் கொள்வதற்கு இடசௌகரியங்களில்லாமையால் வியவஸாயிகளுக்கு அறுவடையான வுடனேயே மாகுல்களை விற்பனை செய்யும்படி நேரிடுகிறது. ஆகையால் அவர்கள் அவைகளைக் குறைந்த விலைக்கு விற்கும்படி ஏற்படுகிறது.

நம்முடைய தேசத்தின் ஏற்றுமதி வியாபாரமானது கணக்கில்லாத தரகரிகளிலிருந்து வேலை செய்து நியாயமில்லாத அளவுகளில் லாபங்களையடைந்து வருவதால் கெட்டுப்போய்க் கொண்டு வருகிறது. மேலும், நமது தேசத்தில் தான்யம், உப்பு, துணி இவ்வகை வஸ்துக்களில் வியாபாரஞ் செய்யும் சிறிய வர்த்தகர்களிடத்தில் நம்முடைய வியவஸாயிகள் கடன்களை வாங்கிக் கொண்டு அறுவடையான உடன் தான்யங்களைக்குறைந்த விலைக்கு அவர்களுக்கு விற்று ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள். அவ்வித ஒப்பந்தங்களில்லாவிட்டால் தான்யங்கள் அறுவடையான கொஞ்சகாலத்திற்குப்பின்பு தக்க இடங்களில் நல்லவிலைக்கு விற்கப்பட்டு வியவஸாயிகள் லாபங்களை அடையக்கூடும். வியவஸாயிகளுக்கும் சிறியவியாபாரிகளுக்கும் உள்ள பேரங்கள் சிறிய வியாபாரிகளின் கணக்குகளில் தான்ய அளவில்காட்டப்படுகிறதில்லை. பணத்தொகையாலேயே குறிக்கப்படுகின்றன. ஏழ்மைத்தனத்தினால் வியவஸாயிகள் தான்யங்களை தூரப்பிரதேசங்களிற்குக்கொண்டு போய் நல்லவிலைக்கு விற்கக்கூடுகிறதில்லை. அறுவடையாகிற தான்யங்களைக் கொட்டிவைப்பதற்காகவும் அவைகளைத்தகுந்த இடங்களிற்குக் கொண்டு போய் நல்லவிலைக்கு விற்கவும் கூட்டுறவு ஏற்பாடுகள் அமையவேண்டும். அவைகள் அமைந்தால் வியவஸாயிகளுக்குக்ஷேமம் ஏற்படக்கூடும்.

கவர்மெண்டார் கொஞ்சகாலமாய் வியவஸாய விஷயங்களில் கவனத்தைச்செலுத்த ஆரம்பித்திருக்கிறார்கள். இதற்குமுன் அவர்களுக்கு நிலங்களை உத்தேசித்து நிலவரி வசூல் ஒன்றுதான் நோக்கமாகவிருந்தது. மஹாண கவர்மெண்டுகள் நிலங்களிலிருந்து ஏராளமான

வரித்தொகைகளை வசூலித்து வருகிறார்கள். வரித்தொகை கவர்மெண்டாரின் பாகம். அது முதல்முதலில் செலுத்தப்படவேண்டியதாகவிருக்கிறது. வரி விதிக்கிற விஷயத்தில் கவர்மெண்டார் உற்பத்திக்கேற்றபடி அதை விதிக்கிறதில்லை.

வெகுநாளைக்கு வெகுநாள் வரையில் நம்முடைய தேசம் வியவஸாய தேசமாகவே இருக்க வேண்டியதாகவிருக்கிறது. நம்முடைய தேசத்தில் உஷ்ணம் அதிகமானதால் தொழில்கள் மேனாடுகளைப்போல் அமைவது கஷ்டம். வியவஸாய அபிவிருத்தி முயற்சிகள் ஏற்படுவதால் வியவஸாயம் மேல் மேல் அப்பியஸிக்கப்படுவது தான் ஜனங்களின் தகுமான ஜீவனவிருத்தியாகும். வியவஸாயத்தை விருத்தியாகக்கொண்டுள்ள ஜனங்களின் சங்கியை 1891இல் மொத்த ஜனத்தொகையில் 100க்கு 61ஆகவிருந்தது, 1901இல் 66 ஆகவிருந்தது, 1911இல் 71ஆக விருந்து, 1921இல் 73ஆக ஏற்பட்டு விட்டது. இனி அந்த சங்யை உயரு மென்பதில் சந்தேகமே யில்லை.

1880-ம்வருஷத்தில் பஞ்சவிசாரணை சபையார் தேசத்தில் பயிர் ஊழியர்கள் அளவிற்கு மீறியிருப்பது தான் தேசத்தின் செல்வ க்ஷேம நிலைமை குறைக்கிறதென்று மொழிந்திருக்கிறார்கள். அந்நியநாடுகளிற்கு ஏற்றுமதிக்காகப் பொருள்களை உர்பத்தி செய்கிறநிலங்களின் மொத்த விஸ்தீர்ணத்தை மொத்த சாகுபடி விஸ்தீரணத்திலிருந்து கழிப்போமாகில் சராசரியில் ஜனத்தொகையில் ஒவ்வொரு நபருக்கு 2ஏகரா நிலம் தான் தேறுகிறது. இதைக்கொண்டு கோடியான கோடி இந்திய ஜனத்தொகையின் உணவும் உடையும் ஏற்படவேண்டியதாகவிருக்கிறது.

வியவஸாய உற்பத்திக்கும் முயர்ச்சிகளுக்கும் யாதொரு பங்கமின்றி பயிரூழியர்களில் சிலர் அவ்விருத்தியிலிருந்து நீக்கப்படக்கூடும். யந்திரங்களும் கருவிகளும் அதிகமாக உபயோகப்படுத்தப்படுமாகையால் அநேக பயிரூழியர்களுக்கு-வேலையில்லாமல் போய்விடும். ஆகவே, இதரத்தொழில்கள் ஏற்படுத்தப்பட்டாலொழிய ஜனங்களின் க்ஷேம நிலையுயராது.

நமது தேசத்தில் 10000 பெயர்களில் 7000 பெயர்கள் பயிரூழியத்தில் அமைந்திருக்கிறார்கள். இன்னும் மொத்த ஜனத்தொகையில் பாதிப்பெயர்கள்தான் குடும்பங்களின் வரும்படியை யுயர்த்துகிறார்கள். 10 லக்ஷம் பெண்பிள்ளைகளும் வேலைசெய்து ஸம்பா



தித்து குடும்பங்களை சவரக்ஷணை செய்கிறார்கள். ஆடு மாடுகளின் மூலமாக ஜீவனஞ் செய்கிறவர்களுள் 100க்கு 70 பெயர்கள் கூலிக்காரர்கள். 13 கோடி மாடுகளிருக்கின்றன. ஆனால் அவைகள் வெகுசாய் நோஞ்சலாகவும், நோயுள்ளவைகளாகவுமிருக்கின்றன. 3 கோடி வெள்ளாடுகளிருக்கின்றன. ஆடு மாடுகள் பயிர்களுக்குள் புகுந்து பயிர்நஷ்டங்களை விளைக்கின்றன. மாடுகளின் அபிவிருத்தி வழிகளும், கோழிவளர்ப்பு வழிகளும் ஜனங்களுக்குத் தெரியாது.

நம்முடைய தேசத்தில் யந்திரசாலைத்தொழில்களல்லாத வீடுகளில் அநுஷ்டிக்கக்கூடிய சிறியதொழில்களே அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. அத்தொழில்களால் உண்டாக்கப்படும் வஸ்துக்கள் அந்தந்த ஊர்களின் ஜனங்களுக்கு வேண்டிய அளவிற்கு மேல் உண்டாக்கப்படுகிறதில்லை ஆனால் யந்திர சாலைகளில் தயாரிக்கப்பட்ட வஸ்துக்களைக்காட்டிலும் கையினால் தயாரிக்கப்பட்டவை வெகு திறமாக விருக்கிற படியால் யந்திர உபயோகமில்லாமல் வீடுகளில் அநுஷ்டிக்கப்படுகிற கைத்தொழில்களுக்கு அழிவு ஏற்படாது. வீடுகளில் அநுஷ்டிக்கப்படுகிற தொழில்களில் குடும்பத்தாரனைவரும் ஒன்றுசேர்ந்து சந்தோஷத்துடன் வேலை செய்கிறார்கள். வேலையில் ஊக்கமும் புத்தியும்நன்றாக செலுத்தப்படுகின்றன.

வியவசாயம் மாத்திரமே ஜனங்களால் அநுஷ்டிக்கப்பட்டால் அவர்கள் விவேகத்தை அடையமாட்டார்கள். அவர்கள் தொழில்களையும் அநுஷ்டிக்க வேண்டும். மேலும், மழையில்லாமையாலும், இன்னும் இதர இடையூறுகளாலும் வியவஸாயம் எப்பொழுதும் ஒரேமாதிரி நடத்தப்படக்கூடு மென்பதுமில்லை.

கிராம ஜனங்களினால் உற்பத்தி செய்யப்பட்ட துணி, பானை சட்டி, மரசாமான்கள், பித்தளை, வெண்கல, செப்பு சாமான்கள் பட்டண ஜனங்களினால் உர்பத்தி செய்யப்படுகிறவைகளைக்காட்டிலும் பலமடங்கு அதிகமாகவிருக்கின்றன. கைத்தொழில் அநுஷ்டிக்கப்படுவதற்கு ஜனங்களின் ஐக்கியவாழ்வு சாதகப்படுத்துகிறது. அத்தொழிலுக்கு மூலதனமும் வேண்டியதில்லை. கைநசவினால் தான் உயர்ந்த ஆடைகள் நெய்யப்படக்கூடும். கிராம ஜனங்கள் கைநசவை ஸஹாய ஜீவனமாக வைத்துக்கொண்டால் அவர்களுடைய க்ஷேம நிலையுயரும்.

வியவஸாயிகள் கருவிகளையும், விதை தினுசுகளையும் வாங்குகிற விஷயத்திலும், அறுவடையான மாசூலை விற்கிற விஷயத்திலும் கூட்டு வழிகளை யநுஷ்டிக்கிறதில்லை. ஆகையால், அவர்கள் வேண்டிய கருவிகளையும் நல்ல விதைகளையும் வாங்கக்கூடுகிறதில்லை, மாசூலையும் தக்கவிலைக்கு விற்கக்கூடுகிறதில்லை. அவர்கள் ஒன்று சேர்ந்து வாங்கவும் விற்கவும் தொடங்கினால் அதிகச்செலவும் ஏற்படாது, அதிக லாபமும் கிடைக்குமென்பதை யறிந்து கூட்டுறவு சங்கங்களாக ஏற்படவேண்டும்.

வியவஸாயப்பொருள்களை ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்குக்கொண்டு போவதற்குத்தக்கபடி பிறயாணவசதிகள் இல்லை. கிராமங்களில் வயல்களின் இடையிலுள்ள பாதைகள் தான் உபயோகப்படுகின்றன. மேலும் 'ரஸ்தாக்கள் குப்பை நிறைந்தும், மழை காலத்தில் சேருடனும் இருப்பதால்அதில் பிரயாணம் செய்வதுகஷ்டமான விஷயம். ஆகையால் கிராமத்தவர் வெகு தூரப்பிரயாணத்தை விரும்புகிறதில்லை. பிறந்த ஊர்களிலேயே ஜனத்தொகையில் 10-இல் 9 பெயர்கள் வாஸமாயிருந்து விடுகிறார்கள். ரெயில்வேக்கள் மேனாட்டு வர்த்தக விஷயத்தை முன்னுக்குக்கொண்டு வரவேண்டிய நோக்கமாக ஏற்பட்டிருக்கின்றனவே ஒழிய உள்நாட்டில் கிராமத்தாருக்கு அநுகூலமாக ஏற்படவில்லை. மேலும், மேற் சொல்லிய ரெயில்வேக்களின் மூலமாக நமது உற்பத்திகள் வெளிதேசங்களுக்கு அநுப்பப்படுவதால் நமது நாட்டில் பஞ்சங்கள் ஏற்படுகின்றன வென்பதும் சிலரின் அபிப்பிராயம்.

வியவஸாயத்திற்கு நீர்பாசன விஷயம் முக்கியமானது. நமது தேசத்தில் கால மழைகள் தவறுகின்றன. பாசனத்திற்கு நீர் வேண்டியபோதெல்லாம் அகப்பட வேண்டியதற்கு ஏற்பாடுகளும் முயற்சிகளும் தாமஸமில்லாமல் கைக்கொள்ளப்படவேண்டும்.

அந்நிய நாடுகள் விளைந்த தானியங்களை கொண்டு போகின்றன. கடன் கொடுத்து பலவந்தப்படுத்துகிற சாவுகாருக்கு அறுவடையாகிற மாசூல்கள் ஈனவிலைக்கு விற்கப்படுகின்றன. தகுந்த திரவ்யசகாய ஏற்பாடு அமைந்தால் அவ்வளவு லாபமும் கிராமத்தாரைச்சேரும் என்பதில்சந்தேகமில்லை.

ஆகவே இந்திய ஜனங்களின் செல்வ நிலைஉயரவேண்டுமானால் தேசத்தில் வியவஸாயம் தவிர இதரத்தொழில்கள் அமைய வேண்டும். இந்திய ஜனங்கள் இதர தொழில்களில் ஆசையை வஹிக்க வேண்டுமானால் அவர்கள் குழந்தைகளாக பள்ளிக்கூடங்களில் படிக்கும்போதே அவ்விஷயங்களில் போதிக்கப்பட வேண்டும். தற்காலத்தில் பிள்ளைகள் 15வருஷகாலம் பொதுக் கல்வியைக்கற்பது தேசக்ஷேமவிருத்திக்கும் அவர்கள் கஷ்டமில்லாமல் ஜீவனங்களை அநுஷ்டிப்பதற்கும் ஏற்றதாயில்லை. பள்ளிக்கூடப்பிள்ளைகளுக்கு கருவிகளையுபயோகிக்கிற வழிகளில் போதனைகளும், தோட்டம் போடுவதில் போதனைகளும், கூட்டு வழி போதனைகளும் செய்யப்படவேண்டும்.



## கிராம அமைப்பு

[ம—ா—ா—ஸ்ரீ வி. நாராயண ஐயர் எம்.ஏ., எம்.எல்., அவர்களால் எழுதப்பட்டது:]

தென் இந்தியாவில் கிராமங்கள் அமைக்கப் பட்டிருக்கிற ஒழுங்கிலிருந்து அநேக விஷயங்க அறியப்படக்கூடும். கிராமங்களில் நத்தங்கள் மத்தியிலுள்ள மேட்டு பூமிகளில் ஏற்பட்டிருக்கின்றன. வயல்களும் தோட்டங்களும் அந்நத்தங்களைச் சூழ்ந்து கொண்டிருக்கின்றன. நத்தங்கள் மத்தியில் அதிக உயரமாகவும் வர 'வரத்தாழ்ந்துகொண்டு மிருக்கின்றன. அவைகளில் வீடுகள் வரிசை வரிசைகளாகக் கட்டப்பட்டிருக்கின்றன. இப்படி நத்தங்கள் நடுபாகத்தில் அதிக உயரமாகவிருந்து கொண்டு வர வரத்தாழ்ந்து கொணடு போவதின் நோக்கம் வீடுகளின் கழிவு நீர் வயல்களையும் தோட்டங்களையும் அடைய வேண்டுமென்பதுதான். மேலும் இக்கழிவு நீர் வீட்டுப்புழக்கடைகளையும் அடையவும் கூடும். தெருக்கள் காற்று சௌகரியங்களை உத்தேசித்தே ஏறபடுத்தப்பட்டிருக்கின்றன. வடக்கு திக்கிலிருந்து வரும் காற்று கெட்டதாக விருந்தால் கோயில்கள் கிராமங்களின் வடக்குப்பக்கமாக கட்டப்பட்டிருக்கும். அப்படிப்போலவே மேற்கு திக்கிலிருந்து வரும் காற்று கெட்டதாக விருந்தால் அவைகள் மேற்கு பக்கத்தில் கட்டப்பட்டிருக்கும். இப்படி கோயில்கள் கட்டப்பட்ருப்பதால் கெட்ட வடகாற்றும் மேல் காற்றும் அவைகளால் தடுக்கப்படுகின்றன. தென்னல் வீசவும் அவைகள் சௌகரியமாக விருக்கின்றன

எங்கெந்த கிராமங்களில் வடகாற்று மேல் காற்று இவைகளின் அசௌகரியங்கள் இல்லையோ அவைகளில் எல்லாம் கோயில்கள் கிராமங்களின் மத்திய பாகங்களில் கட்டப்பட்டு நான்கு மாடவீதிகள் தேர் ஓடும்படி விசாலமாக அவைகளைச்சுற்றிலும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவ்வீதிகளில் வீடுகள் கோயில் மதில்களுக்கு எதிர்ப்புறமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த வீதிகளை ஜனங்கள் வெகு சுத்தமாக வைத்திருந்தார்கள். கோயில்களில் உற்சவங்கள் வருஷம்முழுவதும் நடைபெற்றனவாதலால் எப்பொழுதும் சுத்தமாக அவைகள் வைக்கப்பட்டிருந்தன. உற்சவகாலங்களில் அவைகள் தோரணங்கள் கட்டப்பட்டும் கோலங்கள் போடப்பட்டும் அலங்கரிக்கப்பட்டன. உற்சவங்களில்லாத நாட்களிலும் வீடுகளின்.

முன் பக்கங்கள் வீட்டுக்காரர்களால் நன்றாக பெருக்கப்பட்டிருந்தன வாதலால் கிராமத்தைப் பெருக்க வேண்டிய நிமித்தமாக ஒரு கிராமப் பெருக்கியவன் வேண்டியதாக விருக்க வில்லை. வீடுகளிற்கு எதிரில் கோயில்களின் மதில்கள் இருந்தமையால் ஜனங்கள் ஜலமல பாதைகளின் நிவர்த்திக்காகத் தெருக்களில் உட்காருகிறதில்லை. வீட்டுப் புறக்கடைகளே அலம்பவும் தோய்க்கவும், ஸ்நாநம் செய்யவும் இடங்களாகவிருந்தன. கோயில் திருக்குளங்களும் கோயில் கிணறுகளும் தான் நல்ல ஜலசௌகரியத்தைக் கொடுத்தன. அவைகள் கோயில் பிராகாரங்களிற்குள் அமைந்திருப்பது காரணம் பற்றி அவைகள் ஜனங்களால் அசுத்தப்படுத்தப்படவில்லை. தவிரவும், கோயில் கிணறுகளிலிருந்து தான் பூஜைக்கு ஜலம் எடுக்கப்பட்டதாகையால் கிணறுகள் சுத்தமாக வைக்கப்படவேண்டியது முக்கியமாகவிருந்தது. கிராமங்களிலேயே நல்ல ஜலத்தை உடைத்தான கிணறுகள் கோயில் கிணறுகள் தான். சுத்தமாகவைக்கப் படவேண்டிய நோக்கத்துடன் தான் நல்ல ஜலக்கிணறுகள் கோயில்களுக்குள் அமைக்கப்பட்டன போல்க்காண்கிறது.

கோயில்கள் கிராமங்களில் நடுவில் கட்டப்பட்டு வீதிகள் வரிசை வரிசைகளாக நான்கு பக்கங்களிலும் அமைக்கப்பட்டு காலி நிலங்கள் கோயில்களும் வீதிகளுமிருக்கிற ஸ்தலத்திற்கும் வயல்கள் தோட்டங்கள் இவைகள் இருக்கிற ஸ்தலத்திற்கும் இடையில் ஏராளமாகவிருந்தன வென்பது சுகாதார சௌகரியங்களை உத்தேசித்தே நல்ல காற்று வீசுவதற்கும் சிறுபிள்ளைகள் விளையாடுவதற்கும் அவைசாதகமாக வாய்ந்திருந்தன.

மேல்கூறியபடி அமைந்திருந்த கிராமங்களில் புதியவீதிகள் வரிசை வரிசைகளாக மாடவீதிகளுக்கு அடுத்தாபோல் அமைந்து வருவது வழக்கம். கூறியபடி கோயில்களும் மாடவீதிகளுமிருக்கிற ஸ்தலங்களிற்கும் வயல்கள் தோட்டங்களிருக்கிற ஸ்தலங்களிற்கும் இடையிலிருக்கும் காலி நிலங்களில்தான் புதிய வீதிகள் ஏற்பட்டு வந்தன. கிராமங்களில் புதிய தெருக்கள் இவ்வளவு தூரம் வரைக்கும் ஏற்படலாமென்பது எல்லை தேவதைகளின் சிலைகளால் அறிவிக்கப்பட்டிருந்தது. எல்லை தேவதைகள் கிராமங்களை ஆபத்துகளிலிருந்து பாதுகாத்ததோடு அவைகளின் தெருக்கள் அவ்வெல்லைகளுக்கு மீறிப்போகக் கூடாதபடியும் பார்த்துக்கொண்டன. ஒரு கிராமத்திற்கும் மற்றொன்றுக்கு மிடையிலுள்ள பிரதேசத்தில் கூட புதியவீடுகளும் தெருக்களும் ஏற்படுவது தடுக்கப்பட்டிருந்தது.



கிராமங்களில் வீடுகள் கோயில்ச்சுவர்களின் உயரத்திற்கு மேல் பட்டு கட்டப்படக்கூடாதென்ற விதி அநுஸரிக்கப்பட்டு வந்தது. கோயில்களின் உயரத்தைக்காட்டிலும் அதிக உயரமாக வீடுகளைக் கட்டுவது கடவுளை மதியாமலிருப்பது போல் கொள்ளப்பட்டிருந்தது.

கிராமநத்தங்கள் கிராமத்தின் அமைப்பு விஷயங்களை யநுஸரித்து ஏற்படுத்தப்பட்டிருந்தன. கோயில்கள் நத்தங்களின் நடுபாகங்களிலோ அல்லது நல்ல ஜலமிருக்கிற இடங்களிலோ அமைந்திருந்தன.

மேற்கூறிய விஷயங்களும் ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்குச் செல்வதற்காக சாலை யேற்பாடும் தற்காலத்திய கிராம நிர்மாணவிஷயங்களை யொத்தவைகளாயிருந்தன வென்று நன்குவிளங்கும்.

தற்காலத்தில் ஜனங்கள் பழயகாலத்திய ஏற்பாடுகளைப்பின்பற்றுகிறதில்லை. ஆகையால் அமைப்பு சம்பந்தமாக கிராமசமூகமும் கவர்மெண்டும்ஒழுங்குமுறைகளை ஏற்படுத்தி கிராமஜனங்களை அவைகளை அப்பியஸிக்கும் படிச்செய்ய வேண்டும். கிராமங்களில் மாடவீதிகளில் ஜனங்கள் வீடுகளின் முன்புறத்தில் திண்ணைகளைப் போட்டுக் கொண்டும் வீதிகளின் பிரதேசத்தை ஆக்கிறமித்துக் கொண்டு மிருப்பதைக் காண்கிறோம். கோவில்களின் மதில் சுவர்களும் பர்பல விதங்களாக உபயோகிக்கப்படுகின்றன. ஜனங்களுக்கு கடவுளிடத்தில்பக்தியும், நம்பிக்கையும் ஆசார ஒழுங்கும் வரவர கெட்டுப்போய் விட்ட படியால் இப்படிப்பட்ட, கிரமம் தப்பின நடத்தைகள் ஏற்படுகின்றன. கவர்மெண்டாரும் தற்காலத்தில் களத்து மேடுகளையும், கிராம சமூகத்தின் பொது உபயோக நிலங்களையும் பள்ளிக்கூடங்களை கட்டுவதற்காகவும், ஆபீசு கட்டிடங்களைக் கட்டுவதற்காகவும் உபயோகிக்கிறார்கள்.

கடவுளிடத்திலும் கிராம தேவதைகளிடத்திலும், [illegible] தைகளிடத்திலும் ஜனங்களுக்கு பய்ம் கிடையாது [illegible] கோயில்களை

199378

காட்டிலும் அதிக உயரமாக வீடுகளை அவர்கள் கட்டுகிறார்கள். வீதி ஒழுங்குகளையும் சரிவர கவனிக்கிறதில்லை. கிராமங்களில் ஒழுங்குகள் ஏற்படவேண்டுமானால், பழய ஏற்பாடுகளின் தத்வங்களில் கிராம ஜனங்கள் போதிக்கப்படவேண்டும். புதிய ஏற்பாடுகளில் அவைகள் உட்கொள்ளப்படவேண்டும். கிராம சமூகங்களுக்கு இவ்விஷயங்களில் அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும். கிராம ஜனங்கள் தங்கள் வீட்டுக்கழிவு ஜலங்களை புழக்கடைவழியாக வயல்களுக்குச் செல்லும்படிச்செய்ய வேண்டும். கிராம ஜனங்கள் அவர்கள் கிராம சம்மந்தமாய் அநுஷ்டிக்க வேண்டிய சுகாதாரக் கடமைகளைப்பற்றி போதிக்கப்படவேண்டும்.

## சுகாதார விஷயங்களைக்குறித்துச்சில வார்த்தைகள்.

[டாக்டர். என். சேஷாகிரி நாதன், காப்டன், ஐ. எம். எஸ், அவர்களால் வரையப்பட்டது.]

நாம் நாகரீகமும் விவேகமும் வாய்ந்த ஜனங்களாக விருந்தபோதிலும் சுகாதார விஷயங்களில் கீழ்பட்ட ஜனங்களாகவே இருக்கிறோம். நாம் சுகாதாரக்குறைவுள்ள ஸ்தலங்களில் வஸிப்பதும், நாம் சுகாதார விரோதமான வழக்கங்களை பின்பற்றுவதும், நாம் நோய்களை விளைக்கக்கூடிய உணவுகளை புஜிப்பதும் தான் நமக்கு க்ஷீணத்தை உண்டு பண்ணுகின்றனவே ஒழிய நம்முடைய கூட்டுவாஸக்குறைகளும் தரித்திர நிலையுமே அதை உண்டுபண்ணவில்லை. நமக்குள் சிலர் கோடீசுவரர்களாக விருக்கிறார்கள், இவர்களைத்தவிர மற்ற வர்களெல்லாரும் தரித்திர நிலைமையில்தான் இருக்கப்பட்டவர்கள் ; மத்திய நிலையில் இருப்பவர்களே கிடையாது. அப்படிப் போலவே ஏதோசிலர் அதிபுத்திமான்களாக விருக்கிறார்கள், மற்றவர்கள் எல்லோரும் மூடர்களாக விருக்கிறார்கள். புத்தி விஷயத்திலும் நடுத்தர நிலையிலிருப்பவர்களில்லை, குணங்களிலும் நெறியிலும், அழகிலும், வர்ணத்திலும் கூட ஜனங்கள் அவ்விதமாகவே அமைந்திருக்கிறார்கள். கல்வி போதனையால் ஜனங்களின் மனப்பாங்கு மாறுமலிருக்கிறது. பட்டணங்களில் கூட தெரு ஓரங்களிலும், சாக்கடைகளிலும் குழந்தைகளும் வயது வந்தவர்களும் ஜலமல நிவர்த்திகளைச் செய்கிறார்கள். சாப்பிட்ட பிறகு எச்சல் இலைகள் தெருக்களின் மத்தியில் எறியப்பட்டு காற்றினால் தெருவில் போகிறவர்களின் மேல் வீசப்படுகின்றன. வீட்டிற்குள்ளும் தங்க



ளுடைய சொந்த தேக விஷயத்திலும் அவர்கள் சுத்த நடக்கைகளைக்கொண்டபோதிலும் அவர்கள் ஸமூகசுகாதார விஷயங்களை கவனிக்கிறதில்லை. ஊரில் பிறருக்கு சுகாதார குறைவை விளைக்கக்கூடிய நடக்கைகளை அவர்கள் பின்பற்றக்கூடாது. சமூகசுகாதாரக்குறைவுகள் பிரதி நபருக்கும் சுகாதாரக் குறைவுகளை விளைக்குமென்பதை அவர்கள் அறிய வேண்டும். காறி எச்சல் உமிகிற வழக்கம் வெகு கெட்டது. எச்சலின் துளிகளின் மூலமாக நோய்க்கிருமிகள் வெளி வரக்கூடும். ஒருவர் எச்சல் துப்புவதால் அருகிலிருப்பவர்களையும் அதை மெதிப்பவர்களையும் அக்கிருமிகள் அடைந்து நோய்களையுண்டாக்கக் கூடும். ஆரம்பப்பள்ளிக் கூடங்களில் சுகாதார விஷயங்களில் போதனைகள் செய்யப்பட்டால், ஜனங்கள் சுகாதாரத்திற்குவிரோதமான நடக்கைகளை பின்பற்றமாட்டார்கள். சுகாதாரப்பிசகான நடக்கைகள் சிறியபட்டணங்களிலும் கிராமங்களிலும் அதிக தீங்குகளை விளைக்கக்கூடும். சிறிய ஊர்களில் குடிப்பதற்கு நல்ல ஜலத்தைவஹிக்கிற ஒரே கிணர் அல்லது குளம் இருப்பது வழக்கம். இப்படிப்பட்ட கிணறோ குளமோ ஸ்நாநத்திற்குக்கூட உபயோகப்படுத்தவும் படுகிறது. அநேக இடங்களில் ஜலமலநிவர்த்திக்குப்பின்பு சுத்திசெய்து கொள்வதற்கும் அது உபயோகப்படுத்தப்படுகிறது. ஜலமலநிவர்த்திகளும் குளக்கரைகளிலும், கிணறுகளின் கரைகளிலும் செய்யப்படுகின்றன. வெய்யல்க்காலத்தில் உலர்ந்து போய்க்கிடக்கும் மல பாகங்கள் மழை பொழியும் பொழுது மழை ஜலத்தில் ஊறி அந்த மழை ஜலத்தின் மூலமாக கிணற்று ஜலத்தையோ குளத்து ஜலத்தையோ அடையும். வாந்திபேதியும் டைபாய்டு ஜுரமும் இப்படிக்கெட்டுப் போயிருக்கிற நீர் உட்கொள்ளப்படுவதாலேயே அநேக ஊர்களில் உண்டாகின்றன. தெருக்களில் ஈரம்சேர்ந்த குப்பையோடு எச்சில் இலைகள்சம்பந்தப்பட்டு ஈக்களையுண்டாக்குகின்றன. இப்படிஉண்டாக்கப்படும் ஈங்கள் காலையில் வீடுகளிற்கு எதிரில் நிவர்த்திக் கப்பட்டிருக்கும் மலங்களைக் காலை போஜனமாகப்புஜித்துவிட்டு பகலில் வீடுகளிற்குள் வீட்டு ஜனங்கள் • பகல் போஜனத்தைச் சாப்பிடும்பொழுது அவர்களுடைய இலைகளில் உட்கார்ந்து பகல் போஜனத்தை உண்கின்றன. அப்படி அவைகள் செய்வதால் நோய்க்கிருமிகளை அந்த போஜனங்களில் சேர்க்கின்றன. இவ்விதமாகத்தான் வயிற்றைச்சம்பந்தப்பட்ட நோய்கள் உண்டாகின்றன. இந்நோய்களைத் தடுக்கவேண்டு

மானல் ஈக்கள் உண்டாவது தடுக்கப்படவேண்டும். ஈக்கள் உண்டாவது எவ்விதங்களால் தடுக்கப்படக்கூடு மென்பது அடுத்த வியாஸத்தில் விவரிக்கப்படும்.

## வெங்காயக்கள்ளி அடர்வதை அழிக்க சிலயோசனைகள்

முன்சஞ்சிகைகளில் ஒன்றில்வங்காளத்தில் இப்பூண்டினால் வியவஸாயமும் ஜனங்களின் ஆரோக்கியமும் கெட்டுப்போவதைப்பற்றி வரைந்திருக்கிறோம். நம்முடையமாஹாணத்திலும் இப்பூண்டு அதிகமாகிக்கொண்டு வருவதால் அது வங்காளத்தில்போலவே நம்முடைமாஹாணத்திலும் நோய்களைவிளைக்கு மென்பதிலும் வியவஸாய முயற்சிகளுக்குக் கஷ்டங்களைவிளைக்கும் என்பதிலும்சந்தேகமில்லை.

இந்தப்பூண்டின் வேர் கொஞ்சகாலஅளவில் 600 சதுரகஜ விஸ்தீர்ணத்தில்பரவும். ஒவ்வொன்றிற்கும் 150 உள் வேர்களிருக்கின்றனவாதலால் இப்பூண்டு வங்காளத்தில் படகுப்பிரயாண சௌகரியங்களையும், ஜனங்களின் ஆரோக்கியத்தையும் பாதிக்கிறது. உள் நாடுகளிற்கு வியாபாரிகள் சென்று வியாபாரம் செய்யக்கூடுகிறதில்லை. இந்தப்பூண்டு ஆறுகளையும் குளங்கள் குட்டைகள் இவைகளையும் அடைந்து அவைகளுள் அழுகிப் போவதால் அவைகளிலுள்ள நீர் கெட்டுப்போகின்றது. இந்நீரைஜனங்கள் குடிப்பதால் விஷஜுரங்கள் ஏற்படுகின்றன. இப்பூண்டை அழிக்கவேண்டிய வழிகளில், அதை எரிப்பதுதான் நல்லதென்று ஒரு நிபுணர் கூறுகிறார். எரித்த பின் ஏற்படும் சாம்பல் எருவாக உபயோகிக்கப்படக்கூடும். இப்பூண்டு வளர்ந்து போவதை சமுத்திர ஜலப்பக்கமாக ஓதிர்கிவிட்டால் சமுத்திர ஜலம்பட்டபின்பு அது அழிந்துவிடுமாம்.

# வர்த்தமானக் குறிப்பு

மைசூரில் நடந்த கூட்டுறவு மஹாநாட்டில் மிஸ்டர் மார்த்தன் அவர்கள் கூட்டுற வியக்கத்தில் ஏற்படுகிற சீர்கேடுகளை விவரித்தார். கூட்டுறவு இயக்கம் இவ்வளவு விருத்தியையடைந்திருக்கும் பொழுது கடன் வாங்கினவர்கள் கடன்களைக் கொடுக்காமலிருப்பது வெகு அதிருப்திகரமான விஷயமென்றும், கூட்டுறவினர்கள் அவர்



களின் பொருப்பையும் சமூக நன்மையையும் கவனிக்கவேண்டுமென்றும் சங்கங்களில் கூட்டுறவினர்கள் மேல் நாடுகளில்போல டிபாஸிட்டுகளை வைக்க வேண்டுமென்றும் கூறினர்.

மிஸ்டர் எ. அரங்கநாத முதலியார் அவர்கள் ஈரோட்டு மஹாநாட்டில் உபந்நியாசிக்கையில் அர்பன் பாங்குகள் டிபாஸிட்டுகளை வாங்கிக்கொண்டும், கடன் கொடுத்துக் கொண்டுமிருந்தால் மாத்திரமே போதாதென்றும் அவைகள் கைத்தொழிலபிவிருத்தியின் பொருட்டும், கல்வி விருத்தியின்பொருட்டும் தேசமுன்னேற்ற வழிகளிலும் மூலதனம் கொடுப்பதில் அமைய வேண்டுமென்றும் கூறினர்.

x x x x

மைசூர் சமஸ்தானத்தில்8863 கிராமப்பஞ்சாயித்துகள் ஏற்பட்டிருக்கின்றன. 430 பஞ்சாயத்துகள் வரிவிதித்துக் கொள்கின்றன. 3000 பஞ்சாயத்துகள் கிராமஜனங்களிடத் திலிருந்து வாரத்தில் ஒரு நாள் வேலையை பஞ்சாயத்து முயர்சிகளில் கிரஹித்துக் கொள்கின்றன இவ்விதமாக 5லக்ஷ ரூபாய் பெருமான வேலை சென்ற வருஷத்தில் நடந்திருக்கிறது. புதிய சட்டத்தின்படி பஞ்சாயத்துகள் வரி விதிக்கக்கூடும். வருஷத்திற்கு 10 லக்ஷரூபாய் வரியால் ஏற்படக்கூடும். ஏற்கனவே பஞ்சாயத்துகள் 14¼லக்ஷ ரூபாயை இருப்பாகச் சேர்த்து வைத்துக்கொண்டிருக்கின்றன. ஆகவே, கிராம முன்னேற்ற முயர்ச்சிகளுக்குத் தேவையான பணம பஞ்சாயத்துகளின் வசத்திலிருக்கிறபடியால் அம் முயர்ச்சிகள் நன்றாய் நடைபெறக் கூடு மென்பதில் சந்தேகமே யில்லை.

x x x x

ஜாவாவில் முன்னேற்றசம்மந்தமாக ஒரு ஸ்தாபன மேற்படுத்தப்பட்டிருக்கிறது. மஹாநாடுகள் நடைபெறுகின்றன. நாடகங்கள் நடத்தப்படுகின்றன. பத்திரிகை யொன்று பிரசுரிக்கப்படுகிறது.

x x x x

இந்தச்சஞ்சிகையிலிருந்து புதிய வால்யூமை ஆரம்பிக்கிறோம். வால்யூம்கள் ஜனவிரி மாதம் ஆரம்பித்து டிசம்பர் மாதத்தோடுமுடிவாக வேண்டுமென்கிற நோக்கத்துடன் அப்படிச்செய்கிறோம். இதர பத்திரிகைகளும் அவ்வித வழக்கத்தையே வஹிக்கின்றன. நமது

சந்தாதார்களும் இந்த மாறுதலில் பிரியப்படுவார்களென்று நம்புகிறோம்.

x x x x x

பாரெஸ்டுப்பஞ்சாயத்துகள் ஸென்டிரல் அர்பன் பாங்கிற்கு டிபாஸிட்டு பணங்களையனுப்பும்பொழுதெல்லாம் பஞ்சாயத்துகளின் பெயர்கள், அவைகளின் போஸ்டாபீசின் பெயர்கள், அவைகள் எந்த ஜில்லாக்களைச் சேர்ந்தனவோ அவைகளின் பெயர்கள், இவ்விவரங்களோடு ஒருதனி அட்ரஸை பாரெஸ்டுப் பஞ்சாயத்தார்களின் யூனியன் லிமிடெட்டின் பிரஸிடெண்டவர்களுக்கு அனுப்பிவிக்க வேண்டுமென்று பலமுறைகளில் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் பல பஞ்சாயத்துகளால் அவ்வேண்டுகோள் கவனிக்கப்படாமலிருப்பது விசனிக்கத்தக்கது. மேற்சொல்லிய, எல்லாவிவரங்களையடங்கிய, பிரத்தியேக அட்வைசுகள் வராததினால் அநேக பிழைகள் யூனியனின் கணக்குகளில் ஏற்படுகின்றன. எப்படியெனில், ஒரே பெயரையுடைய பஞ்சாயத்துகள் இரண்டு ஜில்லாக்களிலிருக்கின்றன. வடஆர்காடு ஜில்லாவில் வேலூர் என்று ஒரு பஞ்சாயித்திருக்கிறது, திருச்சினாப்பள்ளி ஜில்லாவிலும் அப்பெயர் கொண்டபஞ்சாயத்தொன்றிருக்கிறது. ஜில்லாவின் பெயர் பாங்கு அட்வைசில் கொடுக்கப்படுகிறதில்லை. ஆதலால் ஒரு பஞ்சாயத்தின் பணம் இன்னொரு பஞ்சாயத்தின் கணக்கில் குறிக்கப்பட இடம் ஏற்படுகிறது. தவிரவும் இரண்டு மூன்று பஞ்சாயத்துகளுக்கு ஒரே போஸ்டாபீசு இருக்கிறது, போஸ்டாபீசு இருக்கிற ஊரில் ஒரு பஞ்சாயத்தும் அக்கம்பக்க ஊர்களில் இதர பஞ்சாயத்துகளுமாக விருக்கின்றன. சிலசமயங்களில் பணமனுப்பும் பஞ்சாயத்துகள் மணி ஆர்டர்களிலோ லெட்டர்களிலோ தபாலாபீசை மாத்திரம் குறிப்பிட்டுத் தங்களுடைய பஞ்சாயத்து கிராமத்தைக் குறிக்காமல் பணங்களையனுப்புகின்றன. ஸென்டரல் அர்பன் பாங்கார்களும் இந்த விவரங்களை அட்வைசுகளில் தெறிவிக்கிறதில்லை. ஆகையால் ஒரு பஞ்சாயத்தின் பணம் இன்னொரு பஞ்சாயத்தின் கணக்கில் பதிவு செய்யப்படும்படி இடம் ஏற்படுகிறது. இனியாவது பஞ்சாயத்துகள் இவ்வேண்டுகோளை கவனித்து எல்லாவிவரங்களுடனும் பிரத்தியேக அட்வைசுகளை யூனியனின் பிரஸிடெண்டு அவர்களுக்கு அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

x x x x x

நமது தேசாபிமானிகளுள் வெகுசிறந்தவரான பாஞ்சால சிங்கம் என்று வழங்கின லாலாஜபதிராய் அவர்கள் இறந்து போனதைபபற்றி மிகவும் விசனிக்கிறோம். லாலாஜபதிராய் அவர்கள் தேசோத்தாரணத்திற்காக மதவழியிலும், சமூகவழியிலும், இராஜீய வழியிலும் இணையற்ற ஊழியங்களைச் செய்திருக்கிறார். பஞ்சாப் மாகாணத்தில் கல்வி விருத்தியின் நிமித்தமாக உழைத்திருக்கிறார் நமது ஜனங்களின் தரித்திர நிலையையொழிக்க வேண்டிய வழிகளிலும் பாடுபட்டிருக்கிறார். உலகத்தவர்களால் புகழப்பட்டவர். நம்முடைய தேசம் இச்சமயத்தில் இப்பெரியாரை இழந்திருக்கக் கூடாது.



x x x x

ஸர் கே.வி.ரெட்டி நாயடு அவர்கள் தென் ஆப்ரிக்காவில் இந்தியாவின் ஏஜண்டு ஜனரலாக நியமிக்கப்பட்டதைபப்ற்றி நாம் நிரம்ப ஸந்தோஷப்படுகிறோம். இவர் சென்னை கவர்மெண்டில் மந்திரியாயிருந்து புகழ்பெற்றவர். நம்முடைய மாஹாணத்தவரில் இன்னொருவர் அப்பதவியை யடைவது நமது மஹாணத்திற்கே வெகு கௌரவத்தைக் கொடுக்கிறது. ஸர் கே.வி.ரெட்டியவர்களும் ரைட் ஆனரபில் ஸ்ரீனிவாஸ சாஸ்த்திரிகளைப்போல் அத்தேசத்திய இந்தியரின் முன்னேற்றத்திற்கு உழைத்துக் கீர்த்தியைப் பெறுவாரென்பதில் கொஞ்சமேனும் சந்தேகமில்லை.

x x x x

ஸ்ரீமான் ஏ. ராமசுவாமி முதலியார் அவர்கள் சென்னை நகரபரிபாலன சபையின் அக்ராஸனராக தேர்ந்தெடுக்கப்பட்டதைப் பற்றி நாம் வெகு சந்தோஷப்படுகிறோம். ஸ்ரீமான் ராமசுவாமி முதலியார் அவர்கள் ஜஸ்டிஸ் கக்ஷியைச் சேர்ந்த சிறந்த தேசாபிமானி. தேசநன்மையின் பொருட்டு நல்லயோசனைகளை வஹித்த புத்திமான்-ஜஸ்டிஸ் பத்திரிகையின் ஆசிரியர். பாரெஸ்டுபஞ்சாயத்துகள் ஏற்படவேண்டிய நிமித்தமாய் அதிக ஊக்கத்துடன் பாடுபட்டவர். இவருடைய அக்ராஸன காலத்தில் சென்னையின் நகர நிலையுயரும் என்பதில் சந்தேகமில்லை.

x x x x

விருக்ஷங்களும், செடிகளும், மனிதர்களைப்போலவே உயிருள்ளவைகள்தான். அவைகளுக்கும் எல்லா அவயவங்களுமிருக்கின்றன. சுவாஸம், ரத்த ஓட்டம் எல்லாம் அவைகளுக்குமுண்டு. அவைகள் படுங்கஷ்டத்தை தெரிவிக்க அவைகளுக்கு வாயில்லை. அப்படியிருக்கையில் மனிதர்கள் புறம்போக்குகளிலும், பாட்டைகளிலுமிருக்கிற விருக்ஷங்களையும், செடிகளையும் ஒடித்து அவைகளுக்குத்தீங்கு செய்வது சரியா? ஆகையால், நாம் அன்பு பாராட்டி ஒருவரும் அவைகளுக்குத் தீங்கு செய்யாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

x x x x x

ஜபான் தேசத்தில் பட்டாளங்களில் குடிக்கக்கூடாதென்று உத்திரவு ஏற்பட்டபின்பு குடி நின்று போனதுமன்றி சிப்பாய்களுள் குற்றங்களும் ஒழுங்கு தப்பின நடைகளும் வியாதிகளும் குறைவுபட்டிருக்கின்றனவாம்.

x x x x x

நீலகிரியில் வடுகர்கள் வீடுகளில் யூகலிப்டஸ் எண்ணையையுண்டாக்கும் வேலையை அப்பியசிக்கிறார்கள். மொத்தமாக 1500ரூபாய்கள் பெறும்படியான எண்ணை மாதம் ஒன்றுக்கு உண்டாக்கப்படுகிறது. உபயோகிக்கப் படுகிற மூலதனம் ஸ்வல்பமானது. லாபமோ 100க்கு 50வீதம் தேறுகிறது. இந்தத்தொழிலின் அபிவிருத்தியின் நிமித்தம், அநேகஸ்தலங்களில் வெவ்வேறாக விருந்து கொண்டு இத்தொழிலையப்பியஸிக்கிற தனிகபர்களை ஒரே சங்கமாக யேற்படுத்தி அதிக

உற்பத்தியையும் தொழிலாளிகளுக்கு நல்ல லாபங்களையும் உண்டு பண்ண கவர்மெண்டார் யத்தனித்திருக்கிறார்கள்.

x x x x x

லண்டனில் தென் கென்ஸிங்டனில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸைன்ஸ் ம்யூசியத்தின் அத்தியக்ஷகர்கள் அதைச்சேர்ந்த புத்தக சாலைக்கு நமது பத்திரிகையை யனுப்பும்படி கேட்டுக்கொண்டிருக்கிறார். இதுமாதிரி நமது பத்திரிகை மதிக்கப்படுவது நமக்கு திருப்தியை விளைக்கிறது.

x x x x x

இராஜப்பிரதிநிதியின் சபையின் அங்கத்தினராகிய கனம் ஸர் முகம்மது ஹபிபுல்லா ஸாஹிப் அவர்கள் நமது பத்திரிகையை வாசித்து வருகிறவர். வட இந்தியாவில் நமது பத்திரிகை அதிகமாய்ப்படிக்கப்பட வேண்டுமென்றும், உர்துவில் ஓர் பிரதி பிரசுரிக்கப்பட்டால் பஞ்சாபில் முகம்மதிய நிலச்சொந்தக்காரர்கள் கட்டாயமாய் சந்தாதாரர்களாக ஆவார்களென்றும் யோஜனையைச் சொல்லியிருக்கிறார். அவர் நமது பத்திரிகையின் முன்னேற்றமாகக் கவனித்து யோசனை செல்லியதைப்பற்றி நாம் அவரை வந்தனம் செய்கிறோம். வட இந்தியாவிலிருந்து போதுமான சந்தாதாரர்கள் சேர்ந்தவுடன் இந்த யோஜனைப்படி உருதுப்பிரதியொன்றைப் பிரசுரிக்க முயலுவோம்.

x x x x x

பாரதி: மதபேதமற்று, ஜாதி பேதமற்றுக் கட்சி பேதமற்று இந்தியரனைவரும் ஒரு தாயின் மக்கள் என்ற மேலான கொள்கையுடன் இத்தேசத்தில் இப்பொழுது நிலவிவரும் சில அர்த்தமற்ற அனுவசிய மூடக்கொள்கைகளை நிர்மூலம் செய்யப்பிரசாரம் செய்துகொண்டே தேசாபிவிருத்தியை நாடி உழைக்கும் தேசீய மணம் கமழும் மாதப்பத்திரிகை யொன்று "பாரதி" என்ற பெயருடன் ஜனவரிமீ முதல் மதுரை ஜில்லா, உத்தமபாளையத்திலிருந்து வெளிவருகிறது. "தேவாங்க மித்திரன்" மாஜி ஆசிரியரும், பத்திரிகைகளுக்கு அடிக்கடி வியாசங்கள் எழுதிக்கொண்டிருப்பவரும், இப்பொழுது "ஏல விவசாயி" என்னும் மாசிகையை திறமையுடன் ஆசிரியராயிருந்து நடத்திக்கொண்டு வருபவருமான தேவாரம் ஸ்ரீமான் நாராயணஸ்வாமி செட்டியார் அவர்கள் இதன் ஆசிரியரும் சொந்தக்காரருமாவர். டெக்லரேஷன் செய்தாய்விட்டது. வியாசங்கள் வந்துவிட்டன. அச்சு வசதிகள் அமைக்கப் பெற்றிருக்கின்றன. போஷகர் சேர்ந்துவிட்டனர். உயர்ந்த அறிஞர்கள் இதற்குக் கட்டுரைகள் எழுதுவதாய் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். "பாரதி" வெளிவரும் தேதியை எதிர்பாருங்கள்.

x x x x x

நவம்பர்மாதம் 22 தேதியுள்ள வாரப்பதிப்பு "ஸ்வராஜ்யா" (தமிழ்) நமக்கு அபிப்பிராய மொழியின் நிமித்தம் அநுப்பப்பட்டிருக்கிறது. அப்பத்திரிகைக்கு நன்கு வரவையளிக்கிறோம். நம்முடைய தேசத்



தில் ஜனத்தொகையில் பெரும்பான்மையோர் கல்வியில்லாதவர்கள். அவர்களுக்கு பல தேசங்களில் நடக்கும் அபிவிருத்தி இயக்கங்களும், தேச முன்னேற்ற முயர்ச்சிகளும் தெரியாமலே போகின்றன. அவர்களுக்கு விவேகமும் ஞானமும் ஏற்பட வேண்டியதற்கு சுவபாஷைகளில் மேலுக்குமேல் வர்த்தமானப் பத்திரிகைகள் ஏற்பட்டு ஊழியஞ்செய்ய வேண்டியதாக விருக்கிறது. நம்முடைய மஹாணத்தில் 4 கோடி ஜனங்களிருக்கையில் பிரசுரமாகும் பத்திரிகைகள் மிகவும் குறைவாயிருக்கின்றன. ஆங்கில ஸ்வராஜ்யாவைப் போலவே இந்த தமிழ் பத்திரிகையையும் நமது தேசத்தின் முன்னேற்ற விஷயமாக இணையற்ற ஊழியத்தைச்செய்யும் என்பதில் யாதொரு ஸந்தேகமும் இல்லை.

நமக்குக்கிடைத்திருக்கிற பத்திரிகையில் வெகு ருசிகரமான விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளுள் இறந்துபோன தேசாபிமானி லாலா லஜிபதிராய் அவர்களின் திவ்விய சரித்திர விஷயங்களும் மஹாத்மா காந்தியவர்களின் சரித்திரத்தின் அத்தியாயம் ஒன்றும் வெகு நேர்த்தியாக வரையப்பட்டிருக்கின்றன.

## விவஸாயக் குறிப்பு.
## வெள்ளைப்பூண்டு பயிர்

இப்பயிர் குளிர்ச்சியான பிரதேசங்களில்தான் நன்றாய் பயிராகும். இதற்கு அதிக மழைகூடாது. இது கோயம்புத்தூர் ஜில்லாவில் உடுமல் பேட்டை தாலுக்காவில் ஏராளமாகப் பயிராகிறது. இதற்கேற்ற மண் வடிகால் வசதியுள்ள செவ்வல் அல்லது கரிசல். பாசனத்திற்கு உப்பில்லாத நல்ல ஜலம் தேவை. முதல்பயிர் வைகாசி ஆனிமாதங்களிலும், இரண்டாவது கார்த்திகையிலும் அனுஷ்டிக்கப்படுகின்றன. இப்பயிருக்கு எரு வண்டல், தொழுஎரு, ஆட்டுக்கிடை. விதைப்பூண்டைக் காயப்போட்டு முளைவரும் பொழுது விதைக்கிறார்கள். ஒரு ஏகருக்கு 10 மணங்குவிதை விதைக்கப்படுகிறது. விதைப்பதற்குமுன் நிலம் புழுதியாக்கப்படுகிறது; நிலத்தில் சிறு பாத்திகளைகட்டி மட்டம் தட்டி தண்ணீர் பாய்ச்சி விதைப்பூண்டுகளை தோல்பிரித்து பருப்புகளாகப் பிறிந்து போகாதபடி உடைத்து 4 அங்குலத்திற்கொரு பருப்பு விழும்படி சிதறி விரைக்கிறார்கள். சிறு கைக்களைக்கொத்தைக்கொண்டு அமுக்கி மண்ணில் மறையும்படியும் செய்கிறார்கள். விதைகளைச்சிதறிய பின்பு சாம்பலும் எருவும் கலந்த மண்ணைத்தூவி மறையச் செய்தல் நலமென்றும் நினைக்கப்படுகிறது. விதைத்த பின்பு நிலம் ஈரத்தோடு இருக்க வேண்டும். 2, 3இல் நீர் பாய்ச்சப்பட்டு வரவேண்டும். 12இலிருந்து 15 தினங்களில் பயிர் முளைத்துவிடுகிறது. முளைத்த 18 நாளானவுடன் களை எடுக்கப்படுகிறது. பின்பு ஒரு மாதத்திற்கெல்லாம் மறுபடியும் களை எடுக்கப்படுகிறது. இரண்டாவதுகளை எடுப்பு சரிவர எடுக்கப்படாவிட்டால் பூண்டு சரியாய்ப்பிடிக்கிறதில்லை. இந்த இரண்

டாவது களை வெட்டப்பட்ட பின்பு பூண்டுகட்ட ஆரம்பிக்கிறது 4 அல்லது 5 மாதங்களானபிறகு பயிர் முற்றி அறுவடைக்குத் தகுதியாகிறது. செடிகளின் புஷ்பங்களின் மத்தியிலுள்ள வெள்ளை நிறம் மஞ்சளாவதும் தாள்கள் கழுத்துக்குக்கீழே சாய்வதும் பயிர் அறுவடைப்பக்குவத்தை யடைவதற்கு அடையாளங்கள். இப்படி அறுவடைப்பக்குவத்தைப் பயிர் அடைந்தவுடன் நிலத்தில் தண்ணீர் கட்டினால் தாள்களிழுக்கப்படும்பொழுது கிழங்குகள் வந்து விடும். இழுக்கப்பட்ட பின்பு 20, 20 பூண்டுகளாக கட்டுகள் கட்டப்பட்டு பூண்டுகள் வெளிப்புறமாகவும், தாள்கள உள்புறமாகவும் போர் போடப்பட்டு அம்பாரமாக இரண்டு, மூன்று தினங்கள் வைக்கப்படுகின்றன. பின்பு அம்பாரம் பிரிக்கப்பட்டு தாள்கள் அருக்கப்பட்டு பூண்டுகள் 3 தினங்கள் வரையில் காயப்போடப்படுகின்றன. நன்றாய்க்காய்ந்ததும் நன்றாய் தூத்தப்பட்டு சுத்தப்படுத்தப்பட்டு நெருக்கமில்லாமல் நிழலில் காற்றோட்டமாயிருக்கும்படி உலர வைக்கப்படுகின்றன.

ஒரு எக்கர் வெள்ளைப்பூண்டு பயிரிடப்பட்டால் செலவுபோக 300 ரூபாய் லாபம் கிடைக்கிறது.

## மாட்டு விஷயக்குறிப்பு.

## மாடுகளின் நோய்கள்

மலச்சிக்கல்:—கால்நடைகளின் இரைப்பையில் உணவு உலர்ந்து திரண்டு கெட்டிப்பட்டு விடுவதாலும், கால்நடைகள் ஆவலோடு தின்ன விரும்பும் உணவுகளை மிதமிஞ்சி தின்பதாலும், சத்தில்லாத நாரோடி முதிர்ந்த தட்டுகளைத்தின்பதாலும், வேண்டிய அளவு தண்ணீரை குடியாமலிருப்பதாலும் மலச்சிக்கல்கள் ஏற்படுகின்றன. மலச்சிக்கலுள்ள கால் நடைகள் சாணம் போடும்போது முக்கும்; சாணம் குறையும், புழுக்கை புழுக்கையாயுமிருக்கும்; சிலசமயங்களில் தீனியைத்தின்னாமலும் அசைபோடாமலும் நிற்கும். சிலபோது வயற்றில் வலியிருப்பதாய்க் காணப்படும். 10பலம் கறி உப்பு, ¾பலம் சுக்குத்தூள் ¾படி சுடுதண்ணீர் இவைகளைக்கலந்து போட வேண்டியது. குடிக்க நிரம்பக்கொடுக்கவேண்டும். மருந்து கொடுத்த பின்பு 12மணி காலத்திற்குள் சாணம் நெகிழ்ச்சியாய்ப் போட ஆரம்பிக்கும். வயற்றில் வலியிருந்தால் ¾பலம் மிளகுதூளை மேற்சொல்லிய மருந்தோடு சேர்த்துக்கொள்ள வேண்டும். 1½நாள் பரியந்தம் பேதி போகாமலிருந்தால் 1½ஆழாக்கு விளக்கெண்ணெயில் 30 துளி நேர்வாளத் தைலத்தைச் சொட்டவிட்டுக் கொடுக்கவேண்டும். மருந்து கொடுக்கும்போது வைக்கோலையாவது தான்யத்தையாவது கொடுப்பது உசிதமன்று. கொஞ்சம் பச்சைப் புல்லைக்கொடுக்கலாம். தவிட்டை வெந்நீர்விட்டு அவித்து ஆறியபின்பு கொடுக்கவேண்டும். இதற்குப்பின் ஒருவாரம் வரையில் ⅓பலம் சுக்குத்தூள், ⅓பலம் மிளகுத்தூள் ⅙எட்டி விரைத்தூள் இவைகளைக் கலந்து தீனியில் கொடுக்க வேண்டும். எட்டிவிரையை அவித்தாவது வறுத்தாவதுதான் பொடிபண்ண முடியும். கன்றுகளிற்கு மலச்சிக்கலிருந்தால் ½படி விளக்கெண்ணையைக்கொடுத்தால்நிவர்த்தியையாகும்.



வயற்றுப்போக்கு அல்லது சாதாரணக்கழிச்சல்:—கிராமாந்தரங்களில் கால் நடைகளுக்கு வயற்றுப்போக்கு சாதாரணமாக விருந்து கொண்டிருக்கிறது. தின்னும் உணவு நல்லதாயில்லாததாலும், தண்ணீர் அகப்படாதகோடையில் அசுத்த நீரைக் குடிப்பதாலும், அரை வயற்றுத்தீனியோடு இதர வஸ்துக்களையும் காரப்பூண்டுகளைத் தின்பதாலும், மழைக்காலத்தில் முதல் முளைத்த இளம்பில்லைத் தின்பதாலும், குடலில் பூச்சி உண்டாயிருப்பதாலும் வெக்கை யுண்டாயிருப்பதாலும் இவ்வியாதி உண்டாகிறது. இவ்வியாதியுள்ள மாடு அடிக்கடி தளர்ச்சியாய் சாணமிடும். மாட்டின் உடம்பு மெலிந்து கொண்டுவரும். நோய் நீடித்தால் தின்கிற தீனி உடம்பில் ஒட்டாது. மாடு இளைத்து வயறு ஒட்டிப்போய்விடும். மயிர் சிலுக்கும். கழியும்போது முக்கும். மாட்டிற்குத்தக்கபடி 1 ஆழாக்கிலிருந்து 2 ஆழாக்கு விளக்கெண்ணையைக் கொடுக்கவேண்டும். இதனால் குடலில் செரியாமல் உறுத்துக் கொண்டிருக்கும் தீனிகள் வெளியே வந்துவிடும். இதற்கு மேல்பட்ட வைத்தியம் வேண்டுமானால் காசுக்கட்டி 1ரூபாய் இடை, சீமைச்சுண்ணம்பு 2ரூபாய் இடை, 1ரூபாய் இடை சுக்கு இவைகளைப் பொடி செய்து 2½ ஆழாக்கு அரிசிக்கஞ்சியில் நன்றாய்க்கலந்து கொடுக்கவும். ஆகாரம் கஞ்சி அல்லது கொதிக்கிற வென்னீரில் பொதும்பி ஆறிய தவிட்டைக் கொடுக்கவும். குடிக்க சுத்த ஜலம் கொடுக்க வேண்டும். வெக்கையாயிருக்கும் பக்ஷத்தில் தாலுக்கா தாசில் தாருக்கும், வெடிரினரி அஸிஸ்டெண்டிற்கும் தெரிவிக்கவேண்டும்.

## கிராமாந்தரச்சீரமைப்புக்குறிப்பு

## கிராம கிரந்தசாலை.

கலாசாலைகளையும் பள்ளிக்கூடங்களையும்விட கிரந்தசாலையானது மனிதர்கள் விவேகத்தையடைந்து சுகமாய் வாழ்வுகளை நடத்தவேண்டியநிமித்தம் வெகு உயர்வானது. அதையுபயோகிப்பதற்கு ஜனங்களுக்கு வயதுக்கிரமமென்பதே கிடையாது. நகரங்களில் கிரந்தசாலைகள் உபயோகிக்கப்படுவதற்கும் கிராமங்களில் அவைகள் உபயோகிக்கப்படுவதற்கும் வேறுபாடான தாரதம்மியங்கள் இருக்கின்றன. கிராம ஜனங்கள் ஒருங்கே கூட்டமாயிராமல் பற்பல ஸ்தலங்களில்ச்சிதறியிருப்பது அவர்கள் பொதுவான வேலைகளைப்பற்றிச் சிந்தித்து நடத்துவதற்குக் கஷ்டத்தைக் கொடுக்கிறது. அப்பொதுமுயற்சிகளுக்காக ஒருபிரத்தியேகமான மத்தியஸ்தாபனம் வேண்டும். கிரந்த

சாலைதான் அப்படிப்பட்ட மத்தியஸ்தாபனமாகும். ஆகவே கிறந்தசாலைகளை கிராம ஜனங்கள் ஏற்படுத்த ஆரம்பிக்க வேண்டும்.

கிராமக்கிறந்த சாலைகள் அபிவிருத்தியை அடையும் என்பதில் சந்தேகமேயில்லை. கிராம ஜனங்களுக்கு ஏராளமான ஓய்வு நேரங்களிருக்கின்றன. வருஷத்தில் பாதி காலம் அவர்களுக்கு வேலையில்லாதகாலம். வேண்டிய அளவிற்குமிஞ்சி இருக்கும் செல்வமும் தேகவல்லமையும் வியர்த்தமாகச்சில விடப்பட்டால் அதிக உபத்திரவமேற்படுவதுபோல் அதிக அவகாசம் பலகெடுதிகளை உண்டு பண்ணும். அளவிற்கு மிஞ்சிய அவகாசமிருப்பதால்தான் கிராம வாசிகள் கலகங்களிலும், வியாஜ்ஜியங்களிலும் அமைகிறார்கள். அவர்களுடைய ஓய்வுகாலம் ஒரு பெரிய நிதி. அதை விவேகவழியிலும், செல்வவிருத்திமுயற்சிகளிலும் அவர்கள் செலவழிக்க வேண்டும். தீயவழிகளில் புகாமல் மேற்செல்லிய நன்மார்க்கங்களில் அவர்களைச் செல்லும் படி செய்யக்கூடியது கிறந்தசாலைதான். கிறந்த சாலை ஞான மென்கிற தனத்தை அவர்களுக்குக் கொடுக்கக்கூடியது. கிறந்த சாலையிலிருந்து ஏற்படும் ஞானத்தைக் கொண்டு புத்தியை விகஸிக்கக்கூடிய பலவித ஸ்தாபனங்களை கிராம ஜனங்கள் ஏற்படுத்தி கிராம வாழ்க்கையை ஆனந்தகரமாக செலுத்தக் கூடுமாதலால், கிராம ஜனங்கள் பட்டணவாஸத்திற்குப் போவது நின்று போகும். கிராம ஜனங்களை கிராமங்களிலேயேயிருந்து கொண்டு பயிர் காலங்களல்லாத ஓய்வு காலங்களில் விருத்திக்கான சஹாயத்தொழில்களையநுஷ்டிக்கும்படி அந்த ஞானம் தூண்டும். கிராமங்களிலுள்ள தொழில்கள், வியவஸாயம், தோட்டவேலை இவைகள் சம்பந்தமான புத்தகங்களை ஆவலுடன் கிராம வாஸிகள் கிறந்த சாலையில் படிப்பார்கள்.

நமது மாகாணத்தில் பிரதிவருஷமும் நூற்றுக்கணக்கான பிள்ளைகள் ஆரம்பக்கல்விப்பள்ளிக்கூடங்களிலிருந்து வெளியேறுகிறார்கள். இனி இச்சங்கியைகள் பெருகிவருமென்பதில்ச்சந்தேகமேயில்லை. அதிகப்பணம் செலவிடப்பட்டு இவ்வறிவு அவர்களுக்கு ஏற்படுகிறது. இவ்வறிவை வளரச்செய்ய என்னசாதகங்கள் ஏற்பட்டிருக்கின்றன? இவ்வாறு எழுதப்படிக்கத்தெரிந்த ஞானத்தை பிள்ளைகள் மறந்து விடாமலிருப்பதற்கு கிரந்தசாலைகள் தான் சாதகப்படுத்தக்கூடுமாதலால் கவர்மெண்டார் திட்டத்தில் கிராமகிறந்த சாலைகளின் நிமித்தம் தொகையைப்பகுத்துவைக்கவேண்டும். அப்படி தொகை பகுக்கப்பட்டுக் கிராமக்கிறந்த சாலைகள் ஏற்படாவிட்டால் ஆரம்பக்கல்வியின் நிமித்தமாகச்செலவிடப்படும் பெருந்தொகைகள் வீணாகத்தான்செலவிடப்படுகிறவைகளாகும்.

மேலும், ஆரோகிய இலாக்காவின் முயர்ச்சிகள் கிராமங்களில் உபயோகப்படவேண்டுமானால் கிராமத்தவர்கள் அவ்விலாகாவோடு ஒத்துழைக்கவேண்டும். ஆரோகியவிஷயங்களில் ஞானத்தையும் ஸமூகவாஸத்திற்கேற்ற ஞானத்தையும் அவர்கள் கிராமக்கிறந்த சாலைகளின் மூலமாகத்தான் அடையக்கூடுமாகையால் கிராமக்கிறந்த சாலைகள் ஏற்படவேண்டியது இந்தக்காரணம் பற்றியும்தான்.



இன்னமும், வியவஸாய முன்னேற்றத்தின் நிமித்தம் வியவஸாய இலாகா நவீன முறைகளடங்கிய அநேக புத்தகங்களையும் துண்டுப் பிரசுரங்களையும் பிரசுரிக்கின்றன. இவைகளைப் படிக்க அபிருசியை வஹிக்கவும் கிராமஜனங்களுக்கு கிரந்தசாலைகள் தான் புகட்டக்கூடும். ஆகவே, ஜனங்களின் க்ஷேமநிலையையுயர்த்தக்கூடிய வியவஸாய இலாகாவின் முயற்சிகளும் கிராமகிறந்த சாலைகள் ஏற்பட்டால் வீண்போகா.

கிராம அபிவிருத்திசம்பந்தமாய் கண்காக்ஷிகள் அதிகச்செலவுடன் நடத்தப்படுகின்றன. கண்காக்ஷிகள் தற்கால உற்சாகத்தைத்தான் உண்டுபண்ணுகின்றன. இந்த உற்சாகம் அழிந்து போகாமலிருக்க வேண்டுமானால் கிராமக்கிறந்த சாலை தான் ஞானத்தையுண்டு பண்ணி கிராமத்தாரை அம்முயர்ச்சிகளில் அபிருசியை வஹிக்கும் படி செய்யக்கூடும்

## மதருஸ் பாரேஸ்டு பஞ்சாயத்தார்கள் யூனியன் லிமிடெட்.

கீழ்க்கண்ட பாரெஸ்டு பஞ்சாயத்தார்கள் மதருஸ் பாரெஸ்டு பஞ்சாயத்து யூனியனில் பங்குகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நடந்த டிஸம்பர்மீ முடிவுவரை அப்படி பங்குகள் எடுத்துக் கொண்டவர்களின ஸங்கியை 355. ஒரு பங்கின் பொருப்பு ஒரே ரூபாய்தான். கொடுக்கப்பட்ட மொத்த பங்குகள் 605.

இந்த பத்திரிகையில் ஒவ்வொரு மாதமும் இப்படிப்பட்ட பங்குதாரர்களுடைய பெயர், விலாசம், முதலிய விவரங்கள் பிரசுரிக்கப்படும்.

| நெ. | பெயர் | பஞ்சாயத்து | ஜில்லா | ஷேர் |
|---|---|---|---|---|
| | | | முன்ஸஞ்சிகைபடி மொத்தம் | 133 |
| 81 | முனிசாமி நாயகர் | மேல்கரிப்பூர் | வ. ஆற்காடு | 1 |
| 82 | மன்னார் நாயடு | ,, | ,, | 1 |
| 83 | கோவிந்தசாமி நாயடு | ,, | ,, | 1 |
| 84 | K. வேதி ஆதிதிராவிடர் | ,, | ,, | 1 |
| 85 | முனிசாமி உடையார் | ,, | ,, | 1 |
| 86 | முத்துசாமி உடையார் | குஞ்சாரம் | தெ. ஆற்காடு | 1 |
| 87 | கிருஷ்ணசாமி உடையார் | ,, | ,, | 1 |
| 88 | E. காஸீம் சாயபு | ,, | ,, | 1 |
| 89 | முகம்மது காஸீம் சாய்பு | ,, | ,, | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| 90 | சுப்ரமணிய கோனார் | ,, | ,, | 1 |
| 91 | ஒருதி கவண்டன் | ,, | ,, | 1 |
| 92 | ஸையத் இமாம் சாயபு | ,, | ,, | 1 |
| 93 | N. R. சுப்பராயலு ரெட்டியார் | மனக்கொல்லை | தெ. ஆற்காடு | 5 |
| 94 | M.V. சந்திர ரெட்டியார் | ,, | ,, | 5 |
| 95 | K. சின்னப்பக் கவண்டர் | சின்னய்யம் பட்டி | வ ஆற்காடு | 1 |
| 96 | மொட்டைய கவண்டன் | ,, | ,, | 1 |
| 97 | K M. ஜாம் ஜீ சாயபு | ,, | ,, | 1 |
| 98 | அண்ணாமலை கோனார் | மேல் நாச்சிப்பட்டு | வ ஆற்காடு | 1 |
| 99 | பாவாடை நாயகர் | ,, | ,, | 1 |
| 100 | ராமசாமி நாயடு | ,, | ,, | 1 |
| 101 | சாமிநாத பிள்ளை | ,, | ,, | 1 |
| 102 | குப்புசாமி உடையார் | ,, | ,, | 1 |
| 103 | மாணிக்க உடையார் | ,, | ,, | 1 |
| 104 | ராமசாமி ஆதி திராவிடர் | ,, | ,, | 1 |
| 105 | ஷெயிக் பாபு சாயபு | இரையூர் | வ ஆற்காடு | 1 |
| 106 | கார்ய உடையான் | ,, | ,, | 1 |
| 107 | S. ஈசுவர அய்யர் | ,, | ,, | 1 |
| 108 | S.B. கேசுவர அய்யர் | ,, | ,, | 1 |
| 109 | V. அருணாசல அய்யர் | ,, | ,, | 1 |
| 110 | ராமசாமி நாயடு | ,, | ,, | 1 |
| 111 | சிலைய கவுண்டர் | ,, | ,, | 1 |
| 112 | ராமகிருஷ்ணய்யர் | நரசிங்க நல்லூர் | வ ஆற்காடு | 1 |
| 113 | S. அருணாசல அய்யர் | ,, | ,, | 1 |
| 114 | V. சேதுராம அய்யர் | ,, | ,, | 1 |
| 115 | சின்னபஞ்சை கோனான், | ,, | ,, | 1 |
| 116 | நடேச கவுண்டன் | ,, | ,, | 1 |
| 117 | ஆறுமுக கவுண்டன் | ,, | ,, | 1 |
| 118 | சிதம்பர உடையார் | அயன்தத்தனூர் | திருச்சி | 1 |
| 119 | சாம்பமூர்த்தி அய்யர் | ,, | ,, | 1 |
| 120 | பச்சைமுத்து படையாச்சி | ,, | ,, | 1 |
| 121 | ராமசாமி படையாச்சி | ,, | ,, | 1 |
| 122 | முத்துசாமி படையாச்சி | ,, | ,, | 1 |



| | | | | |
|---|---|---|---|---|
| 123 | ஆறுமுகம் பிள்ளை | ,, | ,, | 1 |
| 124 | T.S. ஏகாம்பிர படையாச்சி, | ,, | ,, | 1 |
| 125 | மணியம் ஸ்ரீனிவாசா சாரியர் | விஷமங்கலம் | வ ஆற்காடு | 5 |
| 126 | G.S. துரைசாமி உடையார் | C: கூடலூர் | ,, | 2 |
| 127 | கோவிந்தசாமி ரெட்டி | மேட்டுபாளையம் | வ ஆற்காடு | 1 |
| 128 | உஸ்மான்ஷரீப் சாயபு | ,, | ,, | 1 |
| 329 | அருணாசல கவுண்டன் | ,, | ,, | 1 |
| 130 | பெரியண்ணா கவுண்டன் | ,, | ,, | 1 |

ஆ மொத்தம் 196.


# இந்திய விவசாயம்.

—— : (o) : ——

ஏழாவது வருடம் நடக்கிறது.

பயிரிடும்முறை, கால்நடை பரிபாலனம், கூட்டுறவு, கிருஷிகர் செய்யக்கூடிய சிறு தொழில்கள், முற்போக்கான விவசாய முறைகள், முதலிய பல விஷயங்களைக்கொண்டு வெளிவரும் ஓர் தமிழ்ப் பத்திரிகை.

மானேஜர், இந்திய விவசாயம் ஆபீஸ்,
தெப்பக்குளம் போஸ்ட், திருச்சினாப்பள்ளி.

குறைந்த விலை! நிறைந்த பலன்!

# அத்புத ஆருடம்

5 கேள்விகளுக்கு ரூபா 1. மேல் கேள்வி 1க்கு 4அணா அதிகம் வி. பி. வேறு கடிதம் எழுதும் நேரம் அனுப்பவும்.

ஸ்ரீ சக்தி தாயித்து :—இதனால் வியாபாரம், உத்தியோகம், பயிர் தொழில் விருத்தியாகும். ஸ்திரீகளுக்கும், குழந்தைகளுக்கும் சங்கா தோஷங்களும், கிரக தோஷங்களும் அடியோடு நிவர்த்தியாகும் சகல நன்மைகளும் உண்டாகும். விலை ரூபா 4 வி. பி. வேறு. நமது பதிலுக்கு, ஸ்டாம்பு அனுப்பவும் வெளிநாடுகளுக்கு எல்லாம் 2 பங்கு சார்ஜ் முன்பணம் அனுப்பவும்

பலாதூர் N. ராமநாத சாஸ்திரியார்,
அடையாறு லைப்ரேரி பண்டிதர்,
மைலாப்பூர்—சென்னை.

எங்கே ப்ளேகெங்கே,　　　ப்ளேகில்லவேயில்லே

நாம் சொல்லும் பிரகாரம் ஹைமாதிபானகத்தை அனுதினமும் உபயோகப்படுத்தினல் ப்ளேக் ஜ்வரம், ப்ளேக். கட்டிகள் கூட கிட்ட நாடமாட்டாது.''

குளிர்ஜவரம், முறைக்காச்சல் ஜன்னியோடு உண்டாகும் ஜ்வரம் முதலான எல்லாவித ஜ்வரங்களுக்கு ராமபாணம்

## எங்கள் ப்ளேக் மருந்துகளுக்கு முக்கிய பிரசித்தி

இண்டியா, பர்மா சிலோன் எடன் முதலிய இடங்களில் 30 வருஷமாய் அநேக ஆயிரம் பிரயாணிகள் ப்ளேகிலிருந்து காப்பாற்றப்படுவதே.

## ப்ளேக் ஜ்வரத்திற்கும் ப்ளேக் கட்டிகளுக்கும்

ஹைமாதிபானக்மும் (ரிஜிஸ்டர்டு) அண்டு சதெளதக்ருதமும்

| | | |
|---|---|---|
| ஷை. | பெரியசெட் | 1-க்கு 2—2—0 |
| | சிரியசெட் | 1—6—0 |

பாகிங் போஸ்டேஜி பிரத்தியேகம்

கோருகிறவர்களுக்கு எங்கள் கேட்லாக்கு இனமாக அனுப்பப்படும்.

**வைத்யரத்ன. பண்டித டி. கோபாலாசார்லு அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட**

ஆயுர்வேத ஆசிரமம்

251, கோவிந்தப்ப நாயகன் வீதி, மதராஸ்

தந்திலாசம் "பண்டிட்" மதராஸ்　　டெலிபோன் நெ. 287, மதராஸ்

199378

# அறிக்கை

"ரூரல் இந்தியா" சந்தாதைகளும் அட்வர்டிஸ்மெண்டு கட்டணங்களும் பாரேஸ்ட்டு பஞ்சாயத்து யூனியன் லிமிடெட்டுக்கு சேர்ந்தபணங்களாகையாலும் யூனியன் ரிஜிஸ்டராகி விட்டபடியால் கணக்கு ஒன்ருகவே இருக்க வேண்டியிருப்பதினலும் இனி ஷேர் துகைகள் பத்திரிகையின் மானேஜரின் விலாஸத்திற்கல்லாமல் அடியில் கண்ட விலாஸத்திற்கே அனுப்பப்பட வேண்டியதென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

A. ருஜகோபால ரேட்டி.

பிரஸிடெண்டு, பாரேஸ்ட்டு பஞ்சாயத்தார் யூனியன் லிமிடெட்டு.

முகாம் :—பாலவாக்கம்

ஊத்துகோட்டை போஸ்ட்டு

செங்கல்பட்டு ஜில்லா.

## டாக்டர் 'ஜீ' பீ என்பவரின் சுகந்த மூக்குத்தூள்

இதில் விலையுயர்ந்த பல வாசனைச் சரக்குகள் சேர்ந்துள்ளன

இதை உபயோகித்தால் ஜலதோஷம், ஒற்றைத் தலைவலி, மண்டைக்குத்தல், உள்பட கண்டத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளும் வெகு சீக்கிரத்தில் சண்டிக்கப்படுமென்பதில் சந்தேகமே கிடையாது. கெடுதயென்பது யாதொன்றும் நேரவே நேராது. சாதா மூக்குத் தூளை 10, 15 தடவை உபயோகிப்பதைவிட இத்தூளை ஒரே ஒரு தடவை உபயோகிக்கலாம். காலணு சாதா மூக்குத்தூளுடன் இந்தத் தூள் இரண்டொரு சிட்டிக்கை மாத்திரம் கலந்தால், தூள் முழுவதும் சுகந்தமாய் விடுவதுமல்லாமல், தன் சுபாவ குணமும்காரமும் மாறவே மாருது. இதைப் பற்றி அநேக நற்சாட்சி பத்திரங்களும் தங்கப் பதக்க பரிசுகளும் கிடைக்கப் பெற்றிருக்கிரோம். மொத்த வியாபாரிகளுக்கு விலை சகாயம் செய்யப்படும்.



REGISTERED TRADE MARK

புட்டி ஒன்றுக்கு விலை அணு 4

**புலி மார்க்**

முதல்தரமான சாதா பட்டணம் பொடியும் விற்கப்படும்.

**குருபசவா அண்டு கம்பேனி, லிமிடெட்**

தபாற் பெட்டி நெ. 510　|　பார்க் டவுன்,

விலாசம் "மெடிகேடெட்"　|　சென்னை

Imitations merely advertise the original

# AMRUTANJAN

The dictionary word for The Pain Balm for 40 years

## A MAGIC CURE FOR

RHEUMATISM
LUMBAGO
HEADACHE
STIFF JOINTS




SPRAINS
COUGH, COLD
NEURALGIA
SWELLINGS

## and All Aches & Pains

It is easier for a camel to go through the eye of a needle than for aches and pains to enter the kingdom of Amrutanjan !!!

**Price 10 As a pot.**

**Amrutanjan Depot**

BOMBAY & MADRAS

Published by MR A. RAJAGOPALA REDDI, President, Forest Panchayatdars' Union Ltd., Madras. *Printed by Mr. T. E. V. SARMA AT THE MAGAZINE PRESS CHINGLEPUT*